**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.311/2023 (Joint Trial with OS. 270/2022)

பெயர் : ராமச்சந்திரன் (PW1) (Cross)

த/க/பெ. :

தேதி :25.07.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்து திருமுல்லை வாசல் வருவாய் கிராமத்தில் உள்ளது என்றால்சரிதான். 2 அயிட்ட சொத்துக்கு வழக்கு போட்டுள்ளேன். 1 வது அயிட்ட சொத்து சர்வே எண். 708/1 ஏ, 200 குழி. 2 வது அயிட்ட சொத்து சர்வே எண். 708/1 ஏ, 1.00 ஏக்கர். வழக்கு சொத்துக்கள் நடராஜன், சுப்புலெட்சுமிக்கு சொந்தம் என்றால் சரிதான். முதல் அயிட்ட சொத்து நடராஜன் 30.06.1982 ல் லெட்சுமியிடம்கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். 2 அயிட்ட சொத்தை 17.11.1979 ல் சுப்புலெட்சுமி சரஸ்வதியம்மாள் என்பவரிடம் கிரயம்வாங்கனிார் என்றால் சரிதான். சுப்புலெட்சுமி என் உடன் பிறந்த சகோதரரி என்றால் சரிதான். நடராஜன் அவருடைய கணவர். பிரதிவாதிகளுக்கு நான் தாய் மாமன் என்றால் சரிதான். நடரஜன் சுப்புலெட்சுமிக்கு பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். சங்கீதா என்ற வாரிசு திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 16.02.2005 ல் நடரலாஜன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 16.11.2014 ல் சுப்புலெட்சுமி இறந்துவிட்டார் என்றால் சரிதான். நடரஜன் சுப்புலெட்சுமி 23.05.2000 தேதியில் எனக்கு உடன் படிக்கை ஏற்படுத்தி இருந்தார்கள். உடன்படிக்கைக்கு பின்னர் 5 ஆண்டுகள் நடராஜன் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். சுப்புலெட்சுமி 14 ஆண்டுகள் உடன் படிக்கை காலத்தில் இருந்துஉயிருடன் இருந்தார் என்றால் சரிதான். அவர்கள் உயிருடன் இருந்த காலத்தில் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் அவர்களிடம் கேட்டேன் பத்திரம் எங்களிடம் இல்லை. காலதாமதம் ஆகும் என்று சொல்லி விட்டார்கள். அவர்கள் உயிரோடு இருந்த போது வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் அவர்கள் உறவுக்காரர்கள் என்பதால் கிரயம் செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில் இருந்தேன். நான் சொல்வது போல் அவர்கள் உடன் படிக்கை ஏற்படுத்திக் கொடுத்திருந்தால் அவர்கள் உயிரோடு இருந்தகாலத்திலேயே நடவடிக்கை ஏற்படுத்தியிருப்பேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நடரஜன் சுப்புலெட்சுமியிடம் நான் கிரயம் கொடுக்குமாறு கேட்டதற்கு பத்திரத்தை அடமானம்

வைத்துள்ளதால் கிரயம் முடித்து தருவதாக சொன்னார்கள் என்று சொல்லி உள்ளேன் என்றால் தெரியவில்லை. அந்த சம்பவம் உண்மை இல்லாததால் அவ்வாறு வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு பக்கத்தில் எனக்குசொத்து உள்ளது என்றால் சரிதான். என் சகோதரி இறப்பிற்கு பின்னர் வழக்கு சொத்துக்கள் வாரிசுகள் என்ற முறையில் பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் உள்ளது என்றால் சரியல்ல. நான் பக்கத்தில் நிலம் வைத்துள்ளதால் தாவா சொத்தை கிரயத்திற்கு கேட்டு அதற்கு பிரதிவாதிகள் மறுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் விலைக்கு தராததால் நான் அவர்களை மிரட்டினேன் என்றால் சரியல்ல. நான் மிரட்டியதால் தான் பிரதிவாதிகள் அவர்களின் அனுபவத்தை தடை செய்யக்கூடாதென்று OS. 270/2022 வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் வழக்கு தாக்கல் செய்து 2 மாதம் கழித்து மோசடியாக கிரய உடன் படிக்கை தாயார் செய்து இந்த வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. கிரய உடன் படிக்கை என் மச்சான் என் பெயரில வாங்கி கொடுத்தார். வா.சா.ஆ. 1 பத்திரத்தில் கே. ராஜேந்திரன் என்ற பெயர் ராமச்சந்திரன் என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அக்கா அவர் கணவர் இறந்துவிட்டதால் அவர்கள் சொத்தை மோசடியாக அபகரிக்கும் நோக்கில்உடன் படிக்கை தயாரித்துக் கொண்டோம் என்றால் சரியல்ல. அவர்கள் இறந்து 7 ஆண்டுகள் கழித்து வழக்கு போட்டுள்ளேன் என்றால் ஆவணம் செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில் இருந்தேன். பிரதிவாதிகளிடம் எப்போது கிரய ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டேன் என்றால் நான் கேட்டுக் கொண்டேதான் இருக்கிறேன் அவர்கள் செய்து தருவதாக சொல்கிறார்கள். இந்த வழக்கிற்கு பின்பு தான் கிரய உடன் படிக்கை குறித்து பிரதிவாதிகளுக்கு தெரியும் என்றாலும் நான் அவர்களிடம் கிரய ஆவணம் எழுதி கேட்கவில்லை என்றால் சரியல்ல. பத்திர பதிவு செய்து தருமாறு பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை நேரடியாக கேட்டேன். பத்திரம் எழுத வேண்டும் என்ற எண்ணத்தில் பதிவு அலுவலகம் சென்ற ஆவணங்களை தயார் செய்தேனா என்றால் இல்லை. அவர்கள் செய்து கொடுப்பார்கள் என்று இருந்தேன். உண்மையிலேயே அக்கா அவர் கணவர் உடன் படிக்கை ஏற்படுத்தி கொடுத்திருந்தால் நான் கிரய ஆவணம் எழுதி பெற எப்பபோதும் தயாராக இருந்திருப்பேன் அவர்கள் அவ்வாறு எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

தாவா வழக்கு சொத்து என் சொத்துக்கு பக்கத்தில்இருபபதால் அதை அடைந்துவிடும் நோக்கில் வழக்கு போட்டுளேளன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பிரதிவாதிகள் சுவாதீனத்தில் உள்ளது என்றாலும் முந்திரி சாகுபடி செய்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல. என் அக்கா மற்றும் அவர் கணவர் இறந்ததை தவறாக பயன் படுத்தி அவர்கள் கையெழுத்தை போலியாக போட்டு சொத்தை அடைய நினைக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 2 சுப்புலெட்சுமிக்காக செலுத்துபவர் என்று என் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் யாருக்காவும் யார் வேண்டுமானாலும் பணம் செலுத்தாலாம் என்றால் சரியல்ல. நான் தான் சாகுபடி செய்து வருகிறேன். நான உறவினர் என்பதால் என்னிடம் தொகை கொடுத்து வரி செலுத்த சொல்லி உள்ளார்கள் என்றால் சரியல்ல. அதற்கான ரசீது தான் வா.சாஆ. 2 என்றாலும் அ தனால் எனக்கு அனுகூலம் கிடைக்ககூடியதுஅ ல்ல என்றாலும் சரியல்ல. ஒப்பந்த தேதி முதல் சொத்து என் சுவாதீனத்தில் இருப்பதாக வழககிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையயிலேயே ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் உரிய நேரத்தில் கிரயம் பெற நடிவடிக்கை மேற்கொண்டு இருந்திருப்பேன் என்றாலும அவ்வாறு இல்லாததரால் தான் 20 ஆண்டுகள் கழித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால சரியல்ல. அவ்வாறு உடன் படிக்கை ஏற்பட வில்லை என்றாலும் கிரயம் கொடுக்க அவர்கள் கடமை பட்டிருகக வில்லை என்றாலும் அவர்கள் சுவாதினத்தில் நான் இடையூறு செய்வதால் தான் என் மீது வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. சொத்து என் வசத்தில் இருப்பதாக பிரதிவாதிகள் மீது எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. என் வசத்தில் இல்லாததால் அவ்வாறு பரிகாரம் கேட்க வில்லை என்றால் சரியல்ல. என் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.